**கமநல அபிவிருத்தி நிதியம் - 2019**

## 1.1 பாதகமான அபிப்பிராயம்

கமநல அபிவிருத்தி நிதியத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், பொழிப்பாக்கிய முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க சேர்த்து வாசிக்கப்படும். 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் தாக்கத்தைத் தவிர, நிதியத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை வெளிப்படுத்தவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்டு பாதகமான அபிப்பிராயம் முன்வைக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் கட்டுப்படுத்தும் தரப்பினரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்தல் மற்றும் முகாமைத்துவமானது நிதியத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் நிதியத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளை பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு நிதியத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- முகாமைத்துவத்தினால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- சம்பவங்கள் அல்லது நிலைமையின் காரணமாக நிதியத்தின் தொடர்ந்து நிலைத்திருந்தல் தொடர்பாக பொருண்மையான நிச்சயமற்ற தன்மை உள்ளதாக என்பது சம்பந்தமாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள்

அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகளின் அடிப்படையில் நிதியத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான அற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள், பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக முகாமைத்துவ தரப்பினருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) நியமம் இலக்கம் 3 இன் 47 ஆம் பந்தியின் பிரகாரம் பொருண்மையான முன்னைய காலகட்டங்களுக்கான பிழைகளை கண்டு பிடித்ததன் பிறகு வெளியிடப்படும் நிதி நிதிக்கூற்றுக்களில் முந்திய காலங்களுக்கேற்ப சீராக்கி ஒப்பீட்டு மதிப்பீடுகளை மீள் அமைத்து அந்த பிழைகளின் தன்மையினை மற்றும் சீராக்கல் செய்யப்பட்ட விதம் குறித்து நிதி நிதிக்கூற்றுக்களில் பகிரங்கப்படுத்த வேண்டும். அப்படியாய் இருப்பினும் சென்ற ஆண்டு தொடர்பாக மீளாய்வாண்டில் ரூபா 194,969,772 ஆன நிதி நிதிக்கூற்றுக்களில் பிழை திருத்தப்பட்டு மீள் அமைக்கப்பட்டிருந்த போதிலும், அது தொடர்பாக நிதி நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை | முன்னே இது போன்று குறைபாடுகள் ஏற்படாது இருக்க நடவடிக்கை எடுப்பேன். | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. |

| | | |
|---|---|---|
| (ஆ) நியமம் இலக்கம் 1 இன் 7 ஆம் பந்தியின் பிரகாரம் வருமானம் மற்றும் சொத்துக்கள் அட்டுறு அடிப்படையில் கணக்கிலிடப்பட வேண்டியதுடன் கணக்கீட்டு குறிப்பு இலக்கம் 01 இன் மூலமும் அட்டுறு அடிப்படையினை பயன்படுத்துவதாக குறிப்பிட்டிருந்த போதிலும், அதற்கு முரணாக ஏக்கர் வரி வருமானம் மற்றும் டிரக்டர் டேலர் வருமானம் காசு அடிப்படையில் கணக்கிலிடப்பட்டிருந்தது. | கணக்காய்வு விசாரிப்பில் கொணரப்பட்டுள்ள தகவல்களை மேலும் விளங்கி முன்னே அதன்படி செயல்படுவதாக தயவு கூர்ந்து அறியத் தருகின்றேன். | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக செயல்பட வேண்டியமை. |

## 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2019 திசெம்பர் 31 ஆந் திகதிக்கான நிதி நிலைமை பற்றிய கூற்றுக்களில் கைட் ட்ரெக்டர் கடன்பட்டோராக சீராக்கிய மிகுதி ரூபா 132,505,955 ஆக இருந்தது. அவ்வாறாயினும், அம்மிகுதியின் 2006 முதல் 2012 வரையில் கூடுதலாக கிடைத்த டிரெக்டர் தவணைப் பணத்தில் ரூபா 2,551,196 கழித்ததன் காரணமாக கடன்பட்டோருக்கான மிகுதியினை அந்த அளவிலேயே குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. மேலும், 2006 முதல் 2012 வருடங்களில் தவணைப் பணத்தினை செலுத்தாது விட்டதனால் கையேற்கப்பட்ட டிறெக்டர்களின் நிலுவைத் தவணைப் பணமான ரூபா 11,499,951 கடன்பட்டோரிடமிருந்து கழித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தவணைப் பணம் செலுத்தாது விட்டமையினால் கையேற்கப்பட்ட டிறக்கடர்களை மீள் விற்பனை செய்வது அல்லது பாவனையிலிருந்து அப்புறப்படுத்தும் செயற்பாடுகள் இன்னமும் முடிவடையாது இருப்பதனால் தொடர்ந்தும் இந்த நிலுவைப் பணம் டிறெக்டர் தவணையினுள் குறிக்கப்பட்டுள்ளது. | கணக்கீட்டு குறைபாடுகள் திருத்தப்பட வேண்டியமை. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2010 ஆம் ஆண்டில் யப்பான் உதவித் திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு கடன் அடிப்படையில் பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்த நீர்க்குழாய்க்கான 2019 திசெம்பர் 31 ஆந் திகதிக்கு அறவிடப்பட வேண்டிய ரூபா 2,830,503 பணம் கணக்கிலிடப்பட்டிருக்கவில்லை. | 2020 ஆம் வருடம் நிதி நிதிக்கூற்றுக்களில் கணக்கிலிட நடவடிக்கை எடுப்பேன். | அறவிடப்பட வேண்டிய மிகுதியினை கணக்கிலிடப்பட வேண்டியமை |
| (இ) | 2012 ஆம் வருடம் 2KR யப்பான் உதவித் திட்டத்தின் கீழ் கமநல சேவை மத்திய நிலையத்திற்கு பெற்றுக்கொடுக்கப்பட்ட டிரெக்டர்களுக்காக 2019 திசெம்பர் 31 ஆந் திகதிக்கு அறவிடப்பட வேண்டிய மிகுதிப் பணமான ரூபா 16,020,000 கணக்கிலிடப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஈ) | மீளாய்வாண்டில் கமநல சேவை மத்திய நிலையங்கள் மற்றும் விற்பனை நிலையங்கள் நிர்மாணிப்பதற்காகவும் திருத்த பணிகள் மற்றும் உபகரணங்கள் கொள்வனவுக்காகவும் செலவிடப்பட்ட ரூபா 5,119,132 க்கான மூலதன செலவு மூலதனமாக்கப்படுவதற்கு பதிலாக வருட செலவினமாக கணக்கிலிடப்பட்டிருந்தது. அதன் காரணமாக மீளாய்வாண்டில் தேய்மான அளவினை ரூபா 511,913 குறைவாக கணக்கிலிடப்பட்டிருந்தது. | அது தொடர்பான சீராக்கலை 2020 ஆம் ஆண்டிற்கான நிதி வெளியீட்டினை தயாரிக்கும் போது திருத்தப்படுவதற்கான நடவடிக்கை எடுப்பேன். | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களின் படி மூலதன செலவினங்கள் முறையாக இனங்கண்டு கொள்ள வேண்டியமை. |
| (உ) | டிரெக்டர் றேலர் கடன்பட்டோராக நிதி வெளியீடுகளில் காட்டப்பட்டிருந்த ரூபா 4,749,500 க்கான மிகுதியிலிருந்து மீளாய்வாண்டு திசெம்பர் 31 ஆந் திகதிக்கு பாவனையிலிருந்து அகற்றப்பட்ட டிரெக்டர் றேலர் பெறுமதியான ரூபா 1,378,500 ஐ கடன்பட்டோரிடமிருந்து கழித்துக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | 2020 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் தயாரிக்கும் போது திருத்துவதற்கான நடவடிக்கை எடுப்பேன். | ஒதுக்கப்பட்ட சொத்துக்கள் கடன்பட்டோர்களிடமிருந்து கழித்துக் கொள்ளப்பட வேண்டியமை. |
| (**ஊ**) | மீளாய்வாண்டில் விவசாயிகளிடமிருந்து அறவிடப்பட்ட முன்னைய வருடங்களுக்கான ரூபா | வருடத்தினுள் இற்றையான டிரெக்டர் வாகன தவணை வருமானம் நிதியத்தின் | ஒவ்வொரு வருடத்திற்கான வருமானம் முறையாக |

| | | | |
|---|---|---|---|
| | 13,588,381 ஆக இருந்த டிரெக்டர் தவணைக் கடன் பணம் மீளாய்வாண்டில் வருமானமாக கணக்கிலிடப்பட்டிருந்தது. | வருமானமாக இனங்கண்டு கொள்வதனால் மீளாய்வாண்டில் விவசாயிகளிடமிருந்து அறவிடப்பட்ட ரூபா 13,588,381 ஆன டிரெக்டர் கடன் தவணைப் பணத்தினை ஆண்டுக்கான வருமானமாக கணக்கிலிடப்பட்டது. | இனங்கண்டு கொள்ள வேண்டியமை. |
| (எ) | 2018 திசெம்பர் 31 ஆந் திகதிக்கு பெற வேண்டிய ஏக்கர் வரி வருமானத்தினை கணக்குகளில் சீராக்கல் செய்யப்படாது இருந்ததுடன் முன்னைய வருடங்கள் தொடர்பாக மீளாய்வாண்டில் பெறப்பட்ட ரூபா 3,062,226 ஆன ஏக்கர் வரி வருமானத்தை மாத்திரம் வருடத்திற்கான வருமானமாக கணக்குகளில் காட்டப்பட்டிருந்தன. | எதிர் வருடத்தில் இதை திருத்துவதற்கான நடவடிக்கை எடுப்பேன். | ஒவ்வொரு வருடத்திற்கும் தொடர்பான வருமானத்தினை முறையாக இனங்கண்டு கொள்ள வேண்டியமை. |
| (ஏ) | முன்னைய வருடங்கள் தொடர்பாக கிடைக்கப் பெற்ற ரூபா 1,008,340 ஆன அனுமதிச்சீட்டு வருமானத்தினை கமநல சேவை மத்திய நிலையங்களுக்கு திருப்பிச் செலுத்தும் போது செலுத்த வேண்டிய அனுமதிச்சீட்டு வருமான கணக்கினை சீராக்கம் செய்வதற்கு பதிலாக மீளாய்வாண்டின் அனுமதிச்சீட்டு வருமானமாக நிதி செயலாற்றல் கூற்றில் காட்டப்பட்டிருந்தது. | 2020 வருடத்தில் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது திருத்துவதற்கான நடவடிக்கை எடுப்பேன். | நிதியம் தொடர்பான அனுமதிச்சீட்டின் வருமானத்தினை முறையாக இனங்கண்டு கொள்ள வேண்டியமை. |

### 1.5.3 பெறவேண்டிய கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| கமநல சேவை மத்திய நிலையம் மற்றும் விவசாய இயக்கங்களுக்கு 2010 ஆம் வருடம் பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்த இரண்டு சக்கர டிரெக்டர் டேலர் மற்றும் நான்கு சக்கர டிரெக்டர் டேலருக்காக 9 வருட காலமாக அறவிடப்பட வேண்டிய ரூபா 4,816,075 ஆன பணத்தை மீளாய்வாண்டின் 2019 திசெம்பர் 31 | மாவட்டங்களிலிருந்து அறிக்கைகள் கிடைத்ததன் பிறகு அவைகளின் பால் சிரத்தை செலுத்தி நிலுவை தவணைப் பணத்தினை அறவிடுவதற்கு அல்லது பாவனையிலிருந்து | அறவிடப்பட வேண்டிய கடன் மிகுதிகளை அறவிடப்பட்டு கொள்ள வேண்டியமை. |

| | | |
|---|---|---|
| ஆந் திகதி வரையிலும் அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அப்புறப்படுத்துவதற்கு பொருத்தமான வேலைத் திட்டமொன்றினை தயாரிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. | |

### 1.5.4 விளங்கப்படுத்தப்படாத முரண்பாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2019 திசெம்பர் 31 ஆந் திகதிக்கு நிதியத்தின் புத்தகத்தின் படி வைப்புக் கணக்கு மிகுதி ரூபா 253,227,092 ஆக இருந்த போதிலும், திறைசேரி புத்தகப் படி வைப்புக் கணக்கு மிகுதி ரூபா 255,879,240 ஆக இருந்தது. அதன் படி ரூபா 652,148 ஆன முரணினை இனங்கண்டு தீர்க்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | 2008 ஆம் வருடம் திணைக்கள பிரதான கணக்கினையும் நிதியத்தின் கணக்கினையும் ஒன்று சேர்க்கப்பட்டுள்ளன. அவ்வாறு ஒன்று சேர்க்கப்படுவதற்கு முன்னர் இந்த ரூபா 651,797 ஆன வித்தியாசம் ஏற்பட்டிருப்பதுடன் இது பற்றி ஆராய்ந்து பார்ப்பதற்கான நியமிக்கப்பட்ட குழுவால் முன்வைக்கப்பட்ட பரிந்துரைகள் 2019 நிதிக்கூற்றினை தயாரித்ததன் பின் பெறப்பட்டதுடன் அதன்பால் சிரத்தை செலுத்த வேண்டிய சீராக்கினை 2020 ஆண்டிற்கான நிதிக்கூற்றின் ஊடாக செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. | முரண்பாடுகளை இனங்கண்டு தீர்க்கப்பட வேண்டியவை. |
| (ஆ) உற்பத்தி விருத்தி மற்றும் விற்பனைப் பிரிவின் அறிக்கையின் படி மீளாய்வாண்டின் அனுமதிக் கட்டணம் மற்றும் நிரப்புதலுக்கான வருமானம் ரூபா 9,258,440 இருக்க வேண்டி இருப்பினும், 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த வருடத்திற்கான நிதிச் செயலாற்றல் கூற்றில் அனுமதிச்சீட்டு கட்டணம் மற்றும் நிரப்புதலுக்கான வருமானமாக ரூபா 6,680,005 | 2020 வருடத்தில் நிதிக் கூற்று தயாரிக்கும் சம்பந்தப்பட்ட திருத்தங்களை செய்யப்படும் எனவும் எதிரில் இத்தவறுகள் ஏற்படுவதை தவிர்ப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதையும் தயவு கூர்ந்து அறியத் தருகின்றேன். | நிதிக்கூற்றுக்களின் மிகுதிகள் சம்பந்தப்பட்ட பிரிவுகளின் அட்டவணைகளுடன் ஒப்பிட வேண்டியமை. |

| | | | |
|---|---|---|---|
| | காட்டப்பட்டிருந்தது. அதன்படி வித்தியாசம் ரூபா 2,578,434 ஆனது. | | |
| (இ) | உற்பத்தி விருத்தி மற்றும் விற்பனைப் பிரிவின் அறிக்கையின் படி 2019 திசெம்பர் 31 ஆந் திகதிக்கு செலுத்தப்பட வேண்டிய நூற்றுக்கு 60 ஆன அனுமதிச்சீட்டுக் கட்டணம் ரூபா 18,705,804 ஆயினும், நிதி நிலைமைக்கான கூற்றில் ரூபா 22,890,972 ஆக காட்டப்பட்டிருந்தது. அதன்படி வித்தியாசம் ரூபா 4,185,167 ஆகும். | 2020 வருடத்திற்கான நிதிக் கூற்று தயாரிக்கும் போது இத்தவறை திருத்துவதற்கான நடவடிக்கை எடுப்பேன். | நிதிக் கூற்றுக்களின் மிகுதிகள் சம்பந்தப்பட்ட பிரிவுகளின் அட்டவணைகளுடன் ஒப்பிட வேண்டியமை |
| (ஈ) | சேவைப் பிரிவின் அறிக்கையின் படி 2019 திசெம்பர் 31 ஆந் திகதிக்கு கமநல அபிவிருத்தி நிதியம் பெற்ற நூற்றுக்கு 20 ஆன ஏக்கர் வரி வருமானம் ரூபா 27,127,351 ஆயினும், 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்றில் நூற்றுக்கு 20 ஏக்கர் வரி வருமானம் ரூபா 27,493,983 ஆனது அதன்படி வித்தியாசம் ரூபா 366,632 ஆகும். | | |

**1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 2011 இலக்கம் 46 கொண்ட கமநல அபிவிருத்தி (திருத்தப்பட்ட) சட்டத்தின் திருத்தப்பட்ட 2000 இலக்கம் 46 கொண்ட கமநல அபிவிருத்தி சட்டம் | | | |
| (i) 56(1) உப பிரிவு | ஏதாவது ஒரு வருடத்தில் ஏக்கர் வரி அறவிடும் அலுவல் அந்த வருடம் மார்ச் 31 ஆந் திகதிக்கு முன்னர் நடாத்தப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டு | எதிர் வருடத்தினுள் ஏக்கர் வரி அறவிடுதல் மற்றும் நிதியத்தின் 20% பங்களிப்பினை பிரதான அலுவலகத்திற்கு உரிய தினத்திற்கு முன்னர் வரவழைத்துக் | சட்ட ஏற்பாட்டின் படி ஏக்கர் வரியினை அறவிடப்பட வேண்டியமை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | தொடர்பான ஏக்கர் வரி அறவிடுதல் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியாகியும் முடிக்கப்படவில்லை. | கொள்வதற்கான திட்டமொன்றினை செயல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |
| (ii) | 97(3) உப பிரிவு | மீளாய்வாண்டினுள் மற்றும் பிந்திய வருடங்களில் நிதியத்தின் செயற்பாடுகள் மற்றும் அலுவலான விவசாயம் தொடர்பான பரிசோதனைகள் எதுவும் செய்யப்பட்டிருக்கவில்லை. | விவசாயம் தொடர்பாக பரிசோதனைக்கான மனிதவளம் எங்களிடம் இல்லாமையினால் எதிர் வருடத்திலிருந்து அது சம்பந்தப்பட்ட வேலைகளை செய்வதற்கு எதிர்பார்க்கின்றேன். | சட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்று வதற்கு செயல்பட வேண்டியமை. |
| (ஆ) | 2015 யூலை 14 ஆந் திகதிய 3/2015 கொண்ட பொது நிதி சுற்றுநிருபத்தின் திருத்தப்பட்ட நிதிப் பிரமாணம் 371(5) | சுற்றுநிருபன ஏற்பாடுகளிலிரந்து விலகி மீளாய்வாண்டில் நிதியத்தின் 11 உத்தியோகத்தர்களால் 31 சந்தர்ப்பங்களில் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த ரூபா 741,622 ஆன முற்பணம் 42 நாள் முதல் 189 நாள் இடையிலான கால வீச்சில் தாமதப்படுத்தி செலுத்தப்பட்டிருந்தது. | பெற்றுக்கொள்ளப்பட்ட முற்பணம் மீள் செலுத்தப்பட்டிருக் காமையினால் ஏற்படும் தாமதத்தினை தவிர்த்துக் கொள்வதற்கான DAD/FIN/PAY/3 இலக்கம் கொண்ட 6/22/2020 திகதிய உள்ளக சுற்று நிருபம் வெளியிடப் பட்டிருப்பதுடன் அதில் குறிப்பிடப்பட்டிருக்கும் விடயங்களை கடுமையாக செயல்படுத்தும் படி சம்பந்தப்பட்ட பிரிவுகளுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | சம்பந்தப்பட்ட உப கட்டுநிதியை தாமதமின்றி சரி செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. |
| (இ) | 2014 பெப்ரவரி 11 ஆந் திகதிய பொது நிதி சுற்று நிருபம் இலக்கம் 01/2014 | மீளாய்வாண்டிற்கான கமநல அபிவிருத்தி நிதியத்திற்காக செயல் நடைமுறை திட்டமொன்றினை தயாரிக்கப் பட்டிருக்கவில்லை. | 2020 ஆம் ஆண்டிலிருந்து முன்னுக்கு செயல் நடைமுறை திட்டமொன்றினை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். | சுற்று நிருப ஏற்பாடுகளுக்கு அமைவாக நிதியத்திற்கான செயல் நடைமுறைத் திட்ட மொன்றினை தயாரிக்கப்பட வேண்டியமை. |
| (ஈ) | கமநல அபிவிருத்தி ஆணையாளர் அதிபதியின் 1992 ஆகஸ்ட் 03 ஆந் திகதிய இலக்கம் 439/92 கொண்ட சுற்றுநிருபம் | ஏதாவதொரு ஆண்டினுள் அறவிடப்படும் ஏக்கர் வரி பணத்தில் நூற்றுக்கு 20 பங்களிப்பினை அவ்வாண்டிலேயே ஏப்ரல் 30 ஆந் திகதிக்கு முன்னர் நிதியத்தில் வரவு வைக்கப்பட வேண்டி | வருடத்தினுள் அறவிடப்பட்ட ஏக்கர் வரி பணத்தில் 20 சதவீத பங்களிப்பினை மாவட்ட கமநல அபிவிருத்தி பதில் / உதவி ஆணையாளரின் கணக்கிற்கு வரவு வைத்துக் கொண்டு | சுற்று நிருப ஏற்பாட்டின் படி நிதியத்தின் வருமானத்தினை அறவிடப்பட வேண்டியமை. |

| | | |
|---|---|---|
| | இருப்பினும் மீளாய்வாண்டில் கமநல சேவை மத்திய நிலையத்தினால் அறவிடப்பட்ட ஏக்கர் வரி பணத்தில் ரூபா 687,049, 2019 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் வரவு வைக்கப்பட்டிருக்கவில்லை | அப்பணத்தினை துரிதகதியில் பிரதான அலுவலகத்திற்கு அனுப்பி வைப்பதற்கு சகல மாவட்டங்களுக்கும் பொறுப்பான கமநல அபிவிரத்தி பதில் / உதி ஆணையாளர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டில் நடவடிக்கை பெறுபேறு ரூபா 3,793,421 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு ஒத்ததாக சென்ற ஆண்டில் அது ரூபா 49,014,580 மிகையாக இருந்தது. அதன்படி நடவடிக்கை பெறுபேறில் ரூபா 52,808,001 ஆன பின்னடைவு அவதானிக்கப்பட்டது. இந்த பின்னடைவுக்கு ஏக்கர் வரி வருமானம் ரூபா 3,048,306 ஆக குறைந்தமை, டிரெக்டர் மற்றும் டேலர் வருமானம் ரூபா 13,561,184 ஆக குறைந்தமை நிரம்பலினை மேம்படுத்தல் மற்றும் அபிவிருத்தி செய்வதற்கான செலவினம் ரூபா 3,809,671 ஆக அதிகரித்தமை, உத்தியோகத்தர்களை பயிற்றுவிப்பதற்கான செலவு ரூபா 25,215,175 ஆக அதிகரித்தல் நிரந்தர சொத்து தேய்மானம் ரூபா 1,400,059 வினால் அதிகரித்தல் மற்றும் பொது செலவினங்கள் ரூபா 8,166,423 ஆக அதிகரித்தல் பிரதான காரணிகள் ஆகும்.

### 2.2 முகாமைத்துவ செயல்பாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் ''கொவிஜன அபிமன்'' எனும் நிகழ்ச்சி ஒன்றினை நடாத்தல் நிதியத்தின் காரியம் அல்லாத போதிலும், நிதியத்திலிருந்து அதற்காக ரூபா 7,314,096 செலவிடப்பட்டிருந்தது. | ''கொவிஜன அபிமன்'' சனாதிபதி விருது வழங்கும் விழாவுக்காக கமநல அபிவிருத்தி நிதியத்தினால் செலவிடப்பட்டது. விவசாயிகள் மற்றும் உத்தியோகத்தர்களை மேம்படுத்துவதற்கும் மற்றும் திணைக்கள தாபன அபிவிருத்தியினை ஏற்படுத்துவதற்கும் என்பதனை குறிப்பிட விரும்புகின்றேன். | சட்டத்தின் நோக்கினை மாத்திரம் நிறைவேற்றிக் கொள்வதற்கு செயல் பட வேண்டியமை. |
| (ஆ) | 2006 ஆம் வருடத்திற்கு முன்னர் இனங்கண்டுள்ள ரூபா 450,000 ஆன மொத்த பற்றாக்குறைக்கு பொறுப்பான உத்தியோகத்தர்களை இனங்கண்டு அந்த நட்டத்தினை அறவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2006 வருடத்திற்கு முன்பிருந்தே இந்த மொத்த பற்றாக்குறையினை சம்பந்தமாக தேடிப் பார்ப்பதற்காக குழுவொன்றை நியமிக்கப்பட்டிருப்பதுடன் அதற்கான பரிந்துரைகள் கிடைத்ததன் பின் மொத்த | நிதிப்பிரமாண பரீட்சையினை துரிதமாக நடாத்தி நட்டத்தினை அறவிட்டுக் கொள்வதற்கு செயல் பட வேண்டியமை. |

| | | | |
|---|---|---|---|
| | | மிகுதியினை தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனை தயவுடன் அறியத்தருகின்றேன். | |
| (இ) | வயற் காணியல்ல என்பதற்கான சான்றை பெற்றுக் கொடுக்கவும் மற்றும் வயற் காணியொன்றினை வேறு அலுவலுக்காக பயன்படுத்துவதற்காக சான்று பெற்றுக் கொடுப்பதற்கும் 03 விண்ணப்பதாரிகளிடமிருந்து 2018 மற்றும் 2019 வருடங்களினுள் ரூபா 1,095,000 ஆன பணத்தினை நிதியத்தின் ஊடாக பெறப்பட்டதுடன் 2020 யூன் 29 திகதி வரையில் விண்ணப்பதாரருக்கு அனுமதிப்பத்திரம் வழங்கப்படவில்லை. | சேவைக் கட்டணம் பெற்றுக்கொண்டதன் பின் மக்கள் எதிர்ப்பு மற்றும் பிரச்சினைகள் எழுந்துள்ளதனால் இதுவரை அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொடுக்காததுடன் பணத்தினை மீளக் கேட்டு விண்ணப்பதாரர்களினால் இதுவரை வேண்டுகோள் விடுவிக்கப்படவில்லை. | விண்ணப்பதாரர்களிடமிருந்து அனுமதிப் பத்திரத்திற்காக பணம் பெற்றுக் கொள்ளப்பட்ட காரியத்திற்கு தாமதமின்றி அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொடுக்கப்பட வேண்டும். அப்படி இல்லாவிடின் விண்ணப்பதாரர்களின் பணத்தினை திருப்பிக் கொடுக்கப்பட வேண்டியமை. |
| (ஈ) | 1989 முதல் 2012 வருடங்களில் யப்பான் உதவி திட்டத்தின் கீழ் விநியோகிக்கப்பட்டு, நிலுவைத் தவணைப் பணம் செலுத்தாமையினால் கையேற்கப்பட்ட இரண்டு சக்கர கை டிரெக்டர் மற்றும் நான்கு சக்கர டிரெக்டர் 70 மீளாய்வாண்டு முடிவுறும் போதும் அப்புறப்படுத்தும் காரியம் செய்து முடிக்கப்படவில்லை. | நிலுவைத் தவணைப் பணம் செலுத்தாதுள்ள டிரெக்கடர்களை அப்புறப்படுத்துவதற்கான மதிப்பீடு செய்வதற்காக மோட்டார் வாகன பரிசோதகரின் உதவியினை பெற்றுக் கொள்வதற்கு இயலாமற் போனதால் அப்புறப்படுத்தும் வேலைகளை முடிக்க முடியவில்லை. | சொத்துக்களின் பெறுமதி தேய்மானம் ஆவதற்கு முன் அப்புறப்படுத்தும் வேலையினை செய்ய வேண்டியமை |
| (உ) | யப்பான் உதவித் திட்டத்தின் கீழ் விநியோகிக்கப்பட்ட இரண்டு சக்கர கை டிரெக்டர் 1174 நான்கு சக்கர டிரெக்டர் 23 மற்றும் இரண்டு சக்கர டிரெக்டர் டேலர் 20 ஆன தவணைப் பணம் கட்டமுடிக்கப்பட்டிருந்தும் மீளாய்வாண்டு முடிவடையும் போதும் சம்பந்தப்பட்ட விவசாயிகளுக்கு உரிமை கையளிக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த டிரெக்டர் பலவினதும் பதிவுரிமை விவசாய அமைச்சின் செயலாளரில் இருப்பதுடன் இன்னும் சுமார் 20 டிரெக்டர்களின் கையளிப்பு அறிவித்தல் கைச்சாத்திடுவதற்காக விவசாய அமைச்சிடம் அனுப்பப்பட்டுள்ளன. இப்போதைக்கு கையளிப்பு நடவடிக்கை செய்வதற்காக சுமார் 25 கையளிப்பு அறிவித்தல்கள் கிடைத்துள்ளன. | கடன் தவணையினை செலுத்திய விவசாயிகளுக்கு சொத்துரிமை பெற்றுக் கொடுக்கப்பட வேண்டியமை. |